**செய்தி வெளியீடு எண்: 336** **நாள்: 22.06.2013**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.6.2013 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு வங்கிகளின் சேவைகளை மேம்படுத்தும் வகையில் மத்திய கூட்டுறவு வங்கியின் நவீனமயமாக்கப்பட்ட 22 கிளைகள், 19 புதிய கிளைகள், வாழைத்தார்கள் கனிய வைக்கும் நிலையம், கூட்டுறவு அலுவலக வளாகக் கட்டடங்கள், கூட்டுறவு சேமிப்பு கிடங்குகள் ஆகியவற்றை திறந்து வைத்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நடமாடும் நியாயவிலைக் கடைகளுக்கான வாகனங்களை வழங்கினார்கள்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க்கடன் மற்றும் விவசாயம் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள மத்திய காலக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் மூலம் பொது மக்களுக்குத் தேவையான நகைக்கடன்கள், வீட்டு அடமானக் கடன்கள், வீட்டு வசதிக் கடன்கள், சிறுவணிகக் கடன்கள், சுயஉதவிக் குழுக்கடன்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன்கள் போன்றவையும் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 762 கிளைகளுடன் லாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளின் சேவைகளை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய கூட்டுறவு வங்கிகளில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்பட்ட 22 கிளைகள்; 2 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 19 புதிய கிளைகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், வரதராஜபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாழைத்தார்கள் கனிய வைக்கும் நிலையம்;

திருவண்ணாமலை, சிவகங்கை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் 5 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவு அலுவலக வளாகங்கள்; சிவகங்கை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கு 4 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள்;

விவசாயிகள் அறுவடைக் காலங்களில் வேளாண் விளைபொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வதைத் தவிர்த்து, கூட்டுறவு விற்பனைச் சங்கம் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள கிடங்குகளில் தங்களது விளைபொருட்களை பாதுகாப்பாக வைத்து நல்ல விலை வரும்போது விற்பனை செய்து அதிக வருவாய் ஈட்டவும், அதுவரை விளை பொருட்களின் சந்தை விலையில் 60 முதல் 80 சதவிகிதம் தானிய ஈட்டுக் கடனாகப் பெற்றுக் கொள்ளவும் கிடங்கு வசதி ஏற்படுத்தப்படுகிறது. இந்த வகையில் 262 கூட்டுறவுச் சங்கங்களில் 36 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிடங்குகள்;

என மொத்தம் 52 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கூட்டுறவு வங்கி கிளைகள் மற்றும் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்யும் தேன், சாமை, வரகு மற்றும் புளி ஆகியவற்றைப் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து, பொதுவான வணிக முத்திரையோடு (Branding) உறையிலிட்டு (Packing) விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் முதல் விற்பனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.6.2013 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கிளாக்காடு மற்றும் மோட்டாம்பட்டி பெரும்பல நோக்கு சங்கங்கள் மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள இராவணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவற்றின் செயல் எல்லையில் உள்ள, தொலைதூர ஊரகப் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை மக்கள் இருக்கும் இடங்களுக்கே சென்று விநியோகிக்க ஏதுவாக 38 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட மூன்று நடமாடும் நியாயவிலைக் கடைகளுக்கான வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களின் பயன்பாட்டிற்காக 20.6.2013 அன்று அலுவலர்களுக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்: 22.6.2013